

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



"காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9 788193 796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 50. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்

ம. இராஜகோபால்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

காலம் காலமாகக் கதை சொல்வதும், கதை கேட்பதும் எல்லா நாடுகளிலும், எல்லா மக்களிடத்திலும் வாய்மொழி மரபாக இருந்து வந்திருக்கிறது. நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே, மக்கள் இனக் குழுக்களாக இருந்த போது, ஓய்வு நேரங்களில் மனிதர்களிடம் தொடர்பு கொள்வதற்கும், குடும்ப உறவினர்களுடன் பொழுதைக் கழிக்கவும் கதை கூறும் மரபைக் கையாண்டு வந்துள்ளனர்.

தமிழர்கள் காலந்தோறும் இராமாயணம், மகாபாரதம், புராணக் கதைகள், கிராமியக் கதைகள், தெனாலிராமன் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள் என பல்வேறு கதைகளைக் கேட்டு வருகின்றனர். கதைகளின் வழியாக ஒழுக்க நெறிகள் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றன. அனுபவத்தின் பயனாலும், தான் கண்டதையும், கேட்டதையும் விரித்துச் சொல்லி, கேட்போரின் பொழுது போக்கிற்குத் துணை நின்றனர். ‘ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜாவாம்’ என்று சுவாரஸ்ய உணர்வோடு கதை தொடங்கும் மரபும் நம்மிடையே இருந்து வந்துள்ளது. கதைகளின் வழியாக ஒழுக்க நெறிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. அதன் படிநிலை வளர்ச்சியை இக்கட்டுரையில் காணலாம்.

## தொல்காப்பியர் கூறும் கதை மரபு

கதை சொல்லும் மரபு, பழங்காலத்தில் இருந்து வந்த வழக்கம் என்பதைத் தொல்காப்பியக் காலத்திற்கு முன்பே இருந்தது என்பதைக் கீழ்க்கண்ட நூற்பா உணர்த்துகிறது.

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்

பாவின்று எழுந்த கிளவி யானும்

பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்

உரைவகை நடையே நான்கென மொழிப" (தொல்.1429)

என்ற நூற்பாவில் பொருளொடு புணராப் பொய்ம்மொழியும், பொருளொடு புணர்ந்த நகைமொழியும் கதைகளாகின்றன. புதுமைப்பித்தனின் "பொன்னகரம்" என்ற சிறுகதை பொருளொடு புணர்ந்த நகைமொழி பொருளொடு புணராப் பொய்ம்மொழி எல்லாக் கற்பனைக் கதைகளையும் குறிக்கிறது.

சங்க இலக்கியத் தனிப்பாடல்கள் அனைத்தும் சிறுகதைகளாகும். பிற்காலத்தில் தோன்றிய காப்பியங்கள் அனைத்தும் நாவல்கள் என்று உணரலாம். அவை அக்காலத்திற்குத் தகுந்தவாறு செய்யுள் வடிவில் இருப்பதை அறியலாம். சிறுகதையின் தோற்றத்தை உலக அளவில் பார்ப்பது ஒரு வகை. நம்மை உலக அளவிற்கு உயர்த்திக் கொள்கிறோம். எட்காசு ஆலன்போ (அமெரிக்கன்), மாபாசன் (பிரெஞ்சு), ஓ ஹென்றி செஸ்டாசுன் (ஆங்கிலம்), டால்ஸ்டாய் (உருசியன்), தாகூர் (வங்காளி - இந்தியன்), புதுமைப்பித்தன் (தமிழன் - இந்தியன்) ஆகியோர் சிறுகதைகள் வரலாற்றில் குறிப்பிடத் தகுந்தவர்கள் என்று உணரலாம்.

தற்காலத்தை "சிறுகதைகளின் யுகம்" என்று சொல்வது தவறில்லை. காப்பியத்தின் இடத்தை நாடகம் கைப்பற்றியது. நாடகத்தின் இடத்தை நாவல் பிடித்துக் கொண்டது. நாவலின் இடத்தைச் சிறுகதை எடுத்துக் கொண்டது என்று கூறலாம். இலக்கியப் பிரிவுகளில் சிறுகதையே மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

## சிறுகதைக்கான இலக்கணம்

அரை மணி முதல் இரண்டு மணிநேரத்துக்குள் படித்து முடிக்கக்கூடியது சிறுகதை என்பர் எட்கார் ஆலன்போ. சுருங்கச் சொல்வதும், சுருக்கெனச் சொல்வதும் இதன் உத்திகளாகும்.

அதனால் நீண்ட வருணனைகளுக்கு இங்கு இடமில்லை. குதிரைப் பந்தயம் போலத் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கனவாக இருத்தல் வேண்டும் என்பர் செட்ஜ்விக். புதினம் புளியமரம் என்றால், சிறுகதை, தென்னைமரம் என்பார் இராஜாஜி.

### சிறுகதைகள் தோன்றிய சூழல்

19 — ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து, தமிழ் இலக்கியத்தின் பரப்பிலும், வடிவத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. அச்சுப்பொறியின் பயன்பாட்டினாலும், ஆங்கில மொழியின் செல்வாக்கினாலும் தமிழ்ச் சிறுகதை வழக்கில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. வாய்மொழியாக வழங்கி வந்த கதைகள் பல நூல் வடிவில் அச்சுப் பெற்று வெளியிடப்பட்டன. இந்த வகையில் முதன்முதலில் அச்சில் வந்தது வீரமாமுனிவரின், "பரமார்த்த குருவின் கதை". அதைத் தொடாசுந்து ஈசாப்பின் நீதிக்கதைகள் திராவிட ஸர்வகாலக்கதைகள், தெனாலிராமன் கதைகள் போன்றவைத் தமிழில் அச்சாயின. இதனால் தமிழ்நாட்டில் கதை கேட்பது மட்டுமல்ல படிக்கும் வழக்கமும் அதிகமாக இருந்தது.

### தமிழ்ச் சிறுகதையின் முன்னோடிகள்

வ.வே.சு ஐயரின் "குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை"யை முதன்முதலில் அறிமுகப்படுத்தியது விவேக போதினி ஆகும். இவரே தமிழ்ச் சிறுகதையின் தந்தை என அழைக்கப்பட்டார்.

குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை, மங்கையர்க் கரசியின் காதல் போன்ற கதைகளில் நிகழ்வு ஒருமை, கால ஒருமை, பாத்திர ஒருமை, உணர்வு ஒருமை என்ற சிறுகதைக்குரிய இலக்கணம் அனைத்தும் ஒருங்கே அமைந்திருப்பதைக் காணலாம். தமிழின் முதல் சிறுகதை படைத்த இவர் தமிழ்ச்சிறுகதை உலகின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

செல்வகேசவராய முதலியாரின் அபிநவக் கதைகள் என்ற தொகுப்பு பெரிதும் பாராட்டப்பட்டது. ஆரம்ப காலச் சிறுகதை

ஆசிரியர்களுள் மாதவைய்யா குறிப்பிடத்தகுந்தவர். இவரது "குசிகர் குட்டிக் கதைகள்" ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியானது. இவர் பிராமணச் சமூகத்தில் காணப்பட்ட குழந்தைத் திருமணம், விதவைகள் பட்ட துயர், வரதட்சணைக் கொடுமை முதலிய சீர்கேடுகளைப் பற்றி தமது கதைகளின் மூலம் மிகவும் வன்மையாகக் கண்டித்ததை உணரமுடிகிறது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வங்காள எழுத்தாளர் இரவீந்திரநாத் தாகூரின் 11 சிறுகதைகளை மொழி பெயர்த்து வெளியிட்டார். கல்கி அவர்கள் சிறுகதைத் துறையில் கால் வைத்து, புதினங்களால் புகழடைந்து கல்கி இதழைத் தொடங்கினார். இவரது கதைகளில் கனையாழின் கனவு, திருடன் மகன் திருடன், வீணை பவானி ஆகிய கதைகள் குறிப்பிடத்தகுந்தவையாகும்.

சொ.விருத்தாச்சலம் என்று அழைக்கப்பட்ட புதுமைப்பித்தன் அவர்கள் சிறுகதை மன்னன் என அழைக்கப்பட்டார். கேலியும் கிண்டலும் கலந்த சமூகச் சாடல் இவரைத் தமிழுலகிற்கு அடையாளம் காட்டியது. சிறுகதைச் செல்வர் என்றும், தமிழ்நாட்டின் மாப்பசான் எனப் போற்றப்பட்டார். இவரது கதைகளில் கயிற்றரவு, சாயவிமோசனம், பொன்னகரம் ஆகியன காலத்தை வென்ற கதைகளாகும். மௌனி என்ற புனைப்பெயரில் மணி அவர்களைப் புதுமைப்பித்தன் சிறுகதை உலகின் திருமூலர் என்று அழைப்பர்.

### இதழ்களால் வளர்ந்த சிறுகதை

தமிழ்ச் சிறுகதையில் மலர்ச்சிக்கு களம் அமைத்தது மணிக்கொடி சிற்றிதழாகும். இது டி.எஸ்.சொக்கலிங்கம், ஸ்டாலின் சீனிவாசன் ஆகியோரால் நடத்தப்பட்டது. பின்னர் இதை முழுக்க முழுக்க சிறுகதை இதழாக பி.எஸ்.ராமையா வெளியிட்டார். இதில் புதுமைப்பித்தன், கு.ப.இராஜகோபாலன், ந.பிச்சமூரசுத்தி, மௌனி போன்றவர்கள் சிறந்த கதைகளை எழுதினார்கள். இவர்கள் மணிக்கொடி தலைமுறை என்று சொல்லப்படுகிறார்கள். தமிழின் சிறந்த சிறுகதைகளை எழுதியவர்கள் என்று

க.நா.சுப்பிரமணியம், சி.சு.செல்லப்பா, லா.ச.ராமமிருதம், கி.ராஜநாராயணன், மு.வ., அகிலன் போன்றவர்கள் குறிப்பிடப் படுகிறார்கள்.

இன்றைய உலகம் இயந்திர உலகம். கணினி உலகம் எங்கும் விரைவு, எதிலும் விரைவு, காப்பியங்களைப் படிக்கவோ, புதினங்களைப் படிக்கவோ நேரமில்லை. அதனால் இலக்கிய விரும்பிகள் சிறுகதைகளை மிகுதியாகப் படிக்கின்றனர். இப்போது பத்திரிக்கைகளின் எண்ணிக்கைகள் மிகுதியாகக் கூடிவிட்டன. எல்லாப் பத்திரிக்கைகளிலும் சிறுகதைகள் வருகின்றன. பக்கத்தை நிரப்புவது பத்திரிக்கைகள் நோக்கம். அதனால் ஒரு பக்க, அரைப் பக்கத் துணுக்குச் சிறுகதைகள் கூட வருகின்றன. பொருள்கள் மிகுதியாகும் போது தரம் குறைதல் இயல்பு. அவசரத்தில் அப்போதைய தேவைக்கு எழுதும் கதைகள் சிந்தித்து எழுதப் பெறுவதில்லை. அதனால் நீண்ட நாட்கள் அவை நிற்பதில்லை. இருப்பினும் சிறுகதைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

### மணிக்கொடிக் காலம் - முன்னோடி நால்வர்

நல்ல கதைகள் தோன்றிய காலம் மணிக்கொடி வெளிவந்த காலமாகும். அதில் கதை எழுதியவர்கள் மணிக்கொடி எழுத்தாளர்கள் எனப்பட்டனர்.

### புதுமைப்பித்தன்

உலக சிறுகதைகளுடன் ஒப்பிடும் அளவுக்குச் சிறுகதைப் படைத்தவர். சிறுகதை இலக்கணத்தை உருவாக்கவல்ல சிறுகதைகளை எழுதியவர். இவரைச் சிறுகதை மன்னன் என்றும், தமிழ்நாட்டின் மாபசான் என்றும் போற்றுவர். அங்கதச்சுவை இவர் கதைகளில் இழையோடியிருக்கும். கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், ஒரு நாள் கழிந்தது. கபாடபுரம், பிள்ளையார் சதுர்த்தி, அகலிகை, சாபவிமோசனம் ஆகியவை புகழ்பெற்ற சிறுகதைகளாகும்.

### கு.ப.ராஜகோபாலன்

பாலியல் சிக்கல்களை மிகுதியாகப் பேசுபவை இவரின் சிறுகதைகள். உயிருள்ள மாந்தர்களைப் படைப்பதில் வல்லவர். விடியுமா, காணாமலேயே காதல், புனர்ஜென்மம், கனகாம்பரம் குறிப்பிடத்தக்கவையாகும்.

### ந. பிச்சமூர்த்தி

இவருடைய சிறுகதைகளில் இந்தியப் பழைமை மரபு மேலோங்கி இருக்கும். சிறுகதையின் சாதனை என்று இவரை ஏற்புடையத்தக்கது என்பர். இவருடைய சிறுகதைத் தொகுப்பு 'பதினெட்டாம் பெருக்கு' என்பதாகும்.

### மௌனி

இவரைச் சிறுகதைத் திருமூலர் என்பார் புதுமைப்பித்தன். இந்தியத் தத்துவ மரபுவேதாந்த விசாரணை அடிப்படையில் சிறுகதைகளைப் படைத்தவர் என்பர். இவை உயர்தரம் உடையவை. எளிதில் புரிந்து கொள்ள இயலாதவை. படிமம், குறியீடுகள் அமைந்திருக்கும். கவிதை நடையிலான போக்கு படிப்பார்க்குச் சோர்வை உருவாக்கும் தன்மையுடையதாகும். அழியாச்சுடர், மணக்கோலம் ஆகியவை இவரின் புகழ்பெற்ற சிறுகதைகள் ஆகும். புதுமைப்பித்தன் கு.ப.ரா., பிச்சமூர்த்தி, மௌனி ஆகிய நால்வரையும் சிறுகதை முன்னோடிகள் எனலாம்.

### அயல்நாடுகளில் சிறுகதை வளர்ச்சி

தமிழ்ச்சிறுகதை வளர்ச்சி என்பது தமிழக எல்லையோடு நின்றுவிடவில்லை. தமிழ் பேசும் பிற நாடுகளிலும் அதன் வளர்ச்சியைக் காணஇயலும். தமிழர்கள் அதிகம் வாழும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்களும் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு வளம் சேர்ந்துள்ளனர்.

### தொழில்நுட்பத்தில் சிறுகதை

இதழ்களால் வளர்ந்த சிறுகதை இணையத்தாலும் வளர்ச்சியினைப் பெற்றது. சிறுகதைக்கெனவே பல

இணையதளங்களும் வலைப்பூக்களும் உயிர்ப்பெறுகின்றன. மேலும் அலைபேசியிலும், பிரதிலிபி போன்ற செயலிகளும் சிறுகதைகளைப் பதிப்பித்து சிறுகதை தேயாது வளம் பெறும் பங்கினைச் செவ்வனே செய்கின்றன.

## முடிவுரை

காலத்துக்கு ஏற்ப வளர்ந்து வந்த தமிழ்ச்சிறுகதை இன்றைய அவசரகாலத்துக்கு ஏற்ப ஒருபக்கக் கதை, அரைப்பக்கக் கதை, கால்ப்பக்கக் கதை, மைக்ரோ கதை என தன் வடிவத்தை மாற்றிக்கொண்டுள்ளது. உலக சிறுகதைகளுக்கு இணையாக தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை வளர்தெடுத்த எழுத்தாளர்களைத் தமிழுலகம் என்றும் மறக்கமுடியாது. இங்ஙனம் சிறுகதை வளர்ந்து வந்த சூழல் குறித்து நன்கு அறிய முடிகிறது.